STADT THUN

DIREKTION BILDUNG SPORT KULTUR
AMT FÜR BILDUNG UND SPORT
**FACHSTELLE FAMILIE**



# Thun, பிள்ளைகள் மற்றும் இளையோருக்கான ஒரு நகரம்

## Thun நகரத்தின் பிள்ளைகள்- மற்றும் இளையோர்

பிள்ளைகள்- மற்றும் இளையோர் எடுத்துக்காட்டல்கள், எவை பிள்ளைகள் மற்றும் இளையோருக்கு Thun நகரத்தில் முக்கியமானவை என்பதை எமக்கு காட்டி நிற்கின்றன. இவை Thun ஐ பிள்ளைகள் மற்றும் இளையோருக்கு உகந்த நல்லதொரு நகரமாக்க எமக்கு உதவுகின்றது.
«நாங்கள்» - என்பது நாம் அனைவருமாகும். அதாவது பிள்ளைகள்- மற்றும் இளையோர் எடுத்துக்காட்டல்கள் எம் அனைவருக்குமானது: பிள்ளைகள் மற்றும் இளையோருடன் செயற்படும் அனைத்து Thuner பிள்ளைகள், இளையோர் மற்றும் அனைத்துப் பெரியவர்களுக்குமானதாகும்.
இது நாங்கள் யார், நாங்கள் எங்கிருந்து வருகின்றோம் மற்றும் நாங்கள் எதை எடுத்துவருகின்றோம் என்பதில் தங்கியிருக்காது.

STADT THUN

# ஒன்றுசேர்ந்து வாழ்வதை நாங்கள் வடிவமைத்துப் பராமரிக்கின்றோம்

நாங்கள் அனைவரும் Thun இல் சமாதானமாக ஒன்றுசேர்ந்து வாழமுடியும்,
இது நாங்கள் உடன்படாமலேயே ஏற்றுக்கொள்ளப்படுகின்றது
ஏனென்றால் எமக்கு ஒரு இடத்தையும் நாம் ஒன்றாக இருப்பதற்கும் வழிசமைக்கின்றது
ஏனென்றால் நாம் எமது பன்முகத்தன்மையை அங்கீகரிப்பதுடன் மதிக்கின்றோம்
இந்த ஒன்றுசேர்ந்த வாழ்வை நாங்கள் ஊக்குவித்துப் பராமரிக்கின்றோம்,
இதன்போது நாங்கள் மற்றவர்களை வெளிப்படையாக அணுகி
எம்மைச் சந்திப்போரின் கேள்விகளைச் செவிமடுப்பதுடன்,
அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு ஒன்றைக் காண
எம்மால் முடிந்தளவில் தனிப்பட்ட முறையில் அதற்கு என்ன பங்களிப்பை
செய்யலாம் என கண்டறிந்து கொள்வோம்.

## நாங்கள் செவிமடுப்பதுடன் சேர்ந்து செயற்படுவோம்

நாங்கள் அனைவரும் Thun இல் எமக்கு முக்கியமான விடயங்கள் குறித்து
தகவல்களை எடுத்தல் மற்றும் பெறுதல்
சேர்ந்து உரையாடுதல் மற்றும் செவிமடுத்தல்
சேர்ந்து செயற்படல் மற்றும் கருத்துக்கூறுதலை செய்ய முடியும்
நாங்கள் எதைக் கூறுகின்றோமோ மற்றும் செய்கின்றோமோ
அவை முக்கியமானது மற்றும் கவனத்தில் எடுக்கப்படும்

இதற்குப் பொறுப்புவகிப்பது, Thun இல் விடயங்கள் எமக்கு நன்றாக உள்ளது என்பதுடன் புதிய யோசனைகளை உருவாக்கி உதவுவதாகும்.

STADT THUN

## நாங்கள் கற்பதுடன் அனுபவம் பெறுவோம்

நாங்கள் அனைவரும் Thun இல், எமது வாழ்வு நடைபோடும் இடத்தில், கற்பதுடன் பல்வேறு அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்

ஏனென்றால் நாம் சொந்தமாக ஈடுபடும் விடயங்களில் நன்மையாக, ஒருவரோடு ஒருவர் மற்றும் ஒருவரிடமிருந்து ஒருவர் விடும் பிழைகளிலிருந்தே நாம் கற்றுக்கொள்கின்றோம்

எமது கற்றலும் எமது அனுபவங்களும் எமக்கு மகிழ்வை ஏற்படுத்துவதுடன்

எம்மை உறுதியாக வளரச்செய்யட்டும்

எமது சந்தர்ப்பங்களை நாம் பயன்படுத்தி

அதன் பயனாக

பொறுப்புகளை ஏற்றுக்கொள்வோம்

## நாம் தகவல் வழங்குவதுடன் எம்மை வலைப்பின்னலாக்குவோம்

நாங்கள் அனைவரும் Thun இல் ஒருவரோடு ஒருவர் தொடர்பில் இருப்பதுடன், இதன்போது நாங்கள் தகவல்கள் மற்றும் அறிந்தவைகள் பகிர்ந்து கொள்ள வேண்டும்

உறவுகளை ஏற்படுத்துவதுடன் அதைப் பராமரிக்க வேண்டும்

ஒன்றுசேர்ந்து செயற்பட வேண்டும்

தகவல்கள், அறிந்தவைகள் மற்றும் நபர்களை இலகுவாக அணுகக்கூடியதாக இருத்தல் வேண்டும்

எமக்கு அவர்கள் எப்போது தேவையோ அப்போது இருத்தல் வேண்டும்,

இதன்மூலம் நாம் ஒருவருக்கொருவர் எமது தேவைகளில் உதவிக்கொள்ள முடியும்.

STADT
THUN

## நாம் ஒருவர் ஒருவரைப் பாதுகாப்பதுடன் உதவுவோம்

எமக்கு தேவைகள் ஏற்பட்டால் அல்லது எமது உடல்நிலை சரியில்லாமல் இருந்தால், நாங்கள் அனைவரும் Thun இல் மனிதர்களிடம் மற்றும் அதற்கான இடங்களிலிருந்தும் உதவிகளைப் பெறலாம், இதனால் நாம் கவனமெடுக்கப்பட்டவர்களாகவும் பலமடைந்தவர்களாகவும் உணர்வோம், இதன்மூலம் எமது உடல்நிலை மற்றும் உளநிலை சிறப்படைய முடியும்.

எம்மைப் பாதுகாக்கவும் உதவவும் இந்த இடங்கள் மற்றும் மனிதர்கள் உள்ளனர்,

இதனால் ஒன்றுசேர்ந்து செயற்படுவதுடன் பாதுகாப்பை உணரமுடியும்

இதன்மூலம் நாங்கள் ஒருவருக்கொருவர் எமது கடமைகள் மற்றும் சவால்களை நிறைவேற்றிக்கொள்ளலாம்.